FIRST INFORMATION REPORT
முதல் தகவல் அறிக்கை
(Under Section 173 BNSS)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8364187

1. District : கோவை மாவட்டம் PS: பீ.நா.க.மாவ காவல்நிலையம் Year: 2026 FIR No.: 09/2026 Date: 28/08/2026
ஆண்டு முதஅ. எண் நாள்

2. (i) Act சட்டம்: The Prevention of Corruption Act 1988 Sections பிரிவுகள்: 7, 12 r/w 7

(ii) Act சட்டம்: As Amended by the Prevention of Corruption Act 2018 Sections பிரிவுகள்:

(iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:

(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : Date from : 27.08.2026 Date to : 27.08.2026
குற்ற நிகழ்வு நாள் நாள் முதல் நாள் வரை

Time Period : Time from : 15.00 Hrs Time to : 23.45 Hrs
நேர அளவு நேரம் முதல் நேரம் வரை

(b) Information Received at PS. Date : 28.08.2026 Time : 13.00 Hrs
காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் நேரம்

(c) General Diary Reference : Entry No(s) 28.08.2026 Time : 13.00 Hrs.
பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் நேரம்

4. Type of Information : Written/ Oral / Electronic form :
தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக / மின்னணு வடிவம் நேரிலையில் தட்டச்சு செய்யப்பட்ட புகார்

5. Place of Occurrence (a) Direction and Distance from PS:
குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் சுமார் 30 கி.மீ வடக்கு

Beat Number : b) Address : ரேஸ்வர்தியம் பட்டாய அலுவலர்கள் அலுவலகம், வடவள்ளி.
முதல் காவல் எண் முகவரி

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : District :
இக்காவல் நிலைய எல்லைக்குள் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : திரு. கி. சிவசுப்பிரமணி (b) Father's/ Husband's Name : சிவசுப்பிரமணியம்
குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் தந்தை / கணவர் பெயர்

(c) Date / Year of Birth : (d) Nationality : இந்தியர் (e) Passport No. :
நாள் / பிறந்த ஆண்டு நாட்டினம் வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

Date of Issue : Place of Issue :
வழங்கப்பட்ட நாள் வழங்கப்பட்ட இடம்

(f) Occupation : தனியார் நிறுவன ஊழியர் (g) Address : மாவட்ட ஆட்சியர் அலுவலர் அலுவலகம் கோவை
தொழில் முகவரி

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்) 1. திரு. ஜெ. ராதா, வட்டாய அலுவலர் (வ.நிலை) 2. திரு. சிவகுமார், உதவி வொத்தியாளர் 3. திரு. செல்வராஜ் ஆனி, கணினி உதவியாளர் (நில்வலிகம்) 4. திரு. பிரபாகரன், இளநிலை அலுவலர் (பிரிவு-1), 5. திரு. மகேந்திர ராஜா அலுவலக உதவியாளர் 6. திரு. பாக்கியராஜ், தொகுதி வழிப்பு நில பகிர்வாளர் (நில்வலிகம்) மேற்படியும் வட்டாய அலுவலர் அலுவலகம், ரேஸ்வர்தியம்

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவர் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

—

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு என் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

நகல் தாளில் இணைக்கப்பட்டுள்ளது.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at Item No.2 registered the case and took up the investigation / directed ..... Rank ..... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.....on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
முத.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

29.8.2026

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

28.08.2026 at 12.30 hrs.

Name: பெயர் .....

Rank: நிலை .....No. என் .....

காவல் உதவி ஆய்வாளர்
இரா.எ.எ மாவட்ட
காவல் அலுவலகம்

கள்ளக்குறிச்சி ஊ.த.க.பிரிவு குற்ற எண்.09/2026, u/s 7, 12 r/w 7 of the Prevention of Corruption Act, 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act 2018 வழக்கின் முதல் தகவல் அறிக்கை வரிசை எண்.12 இன் விபரம்.

பணிந்து அனுப்பப்படுகிறது, அம்மையீர், நான் இன்று 28.08.2026-ந் தேதி சுமார் 13.00 மணியளவில் நிலைய அலுவலில் இருந்தபோது கடலூர், விழுப்புரம் மற்றும் கள்ளக்குறிச்சி மாவட்ட கூடுதல் ஆய்வுக்குழு அலுவலர் திரு.சிவசங்கரன் த/பெ கிருஷ்ணமூர்த்தி அவர்கள் கொடுத்த புகார் மனுவை பெற்று 28.08.2026, 14.00 மணிக்கு கள்ளக்குறிச்சி ஊ.த.க பிரிவு குற்ற எண்.09/2026/KLK, u/s 7, 12 r/w 7 of the Prevention of Corruption Act, 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act 2018 -ன்படி வழக்கு பதிவு செய்யப்பட்டது.

வாதி கொடுத்த புகார் மனுவின் விபரம், அனுப்புநர் சிவசங்கரன், கூடுதல் ஆய்வுக்குழு அலுவலர், கடலூர், விழுப்புரம் மற்றும் கள்ளக்குறிச்சி மாவட்டம் பெறுநர் காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, கள்ளக்குறிச்சி ந.க.எண்:ஆகு.1/466/2026, நாள்.28.08.2026 ஐயா, பொருள்: திடீர் ஆய்வு - கள்ளக்குறிச்சி மாவட்டம் - ரிஷிவந்தியம் ஊராட்சி ஒன்றிய அலுவலகம் - 27.08.2026-ந்தேதி கள்ளக்குறிச்சி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு - காவல் ஆய்வாளர் அவர்களுடன் திடீர் ஆய்வு - புகார் கொடுத்தல் - தொடர்பாக:- பார்வை:திடீர் ஆய்வு மகஜர் நாள்: 27.08.2026 கடலூர், விழுப்புரம் மற்றும் கள்ளக்குறிச்சி மாவட்ட கூடுதல் ஆய்வுக்குழு அலுவலர் திரு.சிவசங்கரன் த/பெ கிருஷ்ணமூர்த்தி ஆகிய எனக்கு ரிஷிவந்தியம் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் பணிபுரியும் திரு.நடராஜன் வட்டார வளர்ச்சி அலுவலர் (வட்டார ஊராட்சி) என்பவர் பொதுமக்களிடமிருந்தும், அவரது நிர்வாகத்திற்குட்பட்ட கிராம ஊராட்சிகளின் செயலாளர்களிடம் இருந்து ஊராட்சியில் நடைபெற்ற வேலைகளுக்கு வழங்கப்பட்ட தொகையில் கமிஷன் என்ற பெயரில் இலஞ்சமாக பணம் பெறுவதாக கிடைத்த நம்பகமான தகவலின்படி மேற்படி அலுவலகத்தை திடீராய்வு செய்வது சம்மந்தமாக கள்ளக்குறிச்சி மாவட்டம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகம் வந்து அங்கிருந்த காவல் ஆய்வாளர் திரு.இ.அருண்ராஜ் அவர்களிடம் கலந்தாலோசித்து, பின்னர் நானும் காவல் ஆய்வாளர் மற்றும் காவல் குழுவினரும் கள்ளக்குறிச்சி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்தில் இருந்து சுமார் 14.00 மணிக்கு புறப்பட்டு சுமார் 15.00 மணிக்கு ரிஷிவந்தியம் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்திற்கு வந்தடைந்தோம். மேற்படி அலுவலகமானது கள்ளக்குறிச்சி to பகண்டை கூட்ரோட்டில் மேற்கு வாயிற்கொண்ட சுற்றுசுவருடன் கூடிய வடக்கு பார்த்து அமைந்துள்ள அலுவலகமாகும். மேற்படி அலுவலகத்தின் உள்ளே செல்ல முற்பட்டபோது அறையின் வராண்டாவில் பின்னர் விசாரணையில் பெயர்விலாசம் தெரிந்த 1) திரு.ஜனார்தனன் த/பெ பூமலை 2) திரு.ராஜாராம் த/பெ சீனுவாசன் 3) திரு.கார்த்திகேயன் த/பெ கருணாமூர்த்தி 4) திரு.ரமேஷ் த/பெ கோவிந்தசாமி 5) திரு.வெங்கடேசன் த/பெ முருகன் 6) திரு.மரியசூசை த/பெ அந்தோணிசாமி 7) திரு.பண்ணீர்செல்வம் த/பெ வேலு 8) திரு.கோவிந்தசாமி த/பெ ராமசாமி 9) ரங்கநாதன் த/பெ மாணிக்கம் 10) திரு.செந்தில் குமார் த/பெ தனபால் 11) திரு.ரவிக்குமார் த/பெ முருகன் 12) திரு.சதிஸ் த/ப சக்கரை 13) அஜீத் த/பெ மூர்த்தி 14) திரு.மணி த/பெ குப்பன் 15) திரு.குணசேகரன் த/பெ அழகப்பன் 16) திரு.கார்த்திகேயன் த/பெ ராமசாமி 17) திரு.செந்தில் த/பெ பூமலை 18) திரு.பழனி த/பெ கதிர்வேல் 19) சாதிக்பாஷா த/பெ உஸ்மான் 20) திரு.பாக்கியராஜ் த/பெ வேலு 21) திரு.அய்யனார் த/பெ வேலு 22) திரு.சுந்தரம் த/பெ கோவிந்தசாமி 23) திரு.முத்துசாமி த/பெ நடேசன் ஆகியோர்

இருந்தனர் அவர்களை அப்படியே வராண்டாவில் அமரச்செய்து அவர்களை கண்காணிக்க ஒரு காவல் அலுவலரை நியமித்துவிட்டு, பிறகு நான் ஆய்வுக்குழுவிருடன் வட்டார வளர்ச்சி அலுவலர் (வட்டரா ஊராட்சி) அலுவலகத்தின் வடகிழக்கு மூளையில் இருந்த திரு.நடராஜன், வட்டார வளர்ச்சி அலுவலர் (வ.ஊ) அவர்கள் இருந்த அறைக்கு சென்றபோது அங்கு அவர் தெற்கு பார்த்து போடப்பட்டிருந்த நாற்காலியில் அமர்ந்திருந்தார். அவரிடம் மேற்படி அலுவலகத்தை திடீராய்வு செய்யப்போவதாக தெரிவித்து, நானும், உடன் வந்த காவல் குழுவினர்கள் அனைவரும் எங்களது அடையாள அட்டையை காண்பித்து அறிமுகப்படுத்திக்கொண்டு நாங்கள் எங்களை சுயபரிசோதனை செய்து எங்களிடம் பணமோ, பொருளோ இல்லை என்பதை உறுதிசெய்து கொண்டோம். பின்பு அவரிடம் உங்கள் அலுவலகத்தை சோதனை செய்ய வந்திருப்பதாக கூறி அவரை உடனிருக்குமாறு கேட்டுக்கொண்டேன். அதற்கு அவரும் சம்மதித்து உடனிருந்தார். அதனை தொடர்ந்து ரிஷிவந்தியம் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் வரண்டாவில் இருந்த நபர்களை வரண்டாவில் வைத்து பெண் அலுவலர்களை பெண்காவலர் திருமதி.தேவிகா அவர்கள் உதவியுடனும் மற்ற அலுவலர்களை காவல் குழுவினரை வைத்து சோதனை செய்ததில் 1.திரு.சுந்தரம் த/பெ கோவிந்தசாமியிடம் ரூ.5,700/-ம், 2.திரு.முத்துசாமி த/பெ நடேசனிடம் ரூ.1,500/-ம், 3.திரு.பாக்கியராஜ் த/பெ வேலுவிடம் ரூ.2,500/-ம், 4.திரு.ரமேஷ் த/பெ கோவிந்தசாமியிடம் ரூ.11,800/-ம், மற்றும் 5.திரு.அய்யனார் த/பெ வேலுவிடம் ரூ.4,000/-மும், இருந்தது. அவர்களை தனிதனியாக விசாரணை செய்ததில் அவர்கள் பணம் வைத்திருந்ததற்கான காரணம் ஏற்புடையதாக இருந்ததாலும், சந்தேகிக்கும்படி எவ்வித செயல்களும் இல்லாததாலும் அவர்கள் வைத்திருந்த பணம் அவர்கள் வசமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. பின்பு வட்டார வளர்ச்சி அலுவலர் (வ.ஊ) அறைக்கு அடுத்தாக உள்ள பொதுபிரிவு அறைக்கு சென்ற போது இடது புறத்தில் கண்ணாடியால் தடுக்கப்பட் மூன்று அறைகள் வரிசையாக கிழக்கு பார்த்து இருந்தது. மேற்படி அறைகளை ஒன்றன்பின் ஒன்றாக சோதனை செய்தபோது முதலாவது அறையில் திரு.தினேஷ் கண்ணன் த/பெ பிரபாகர், காசாளரும், திரு.மோனிஷ் குமார் த/பெ நாகராஜன், இளநிலை உதவியாளரும் அமர்ந்திருந்தனர். மேற்படி காசாளர் அறைக்கு வடக்கு புறம் இருந்த அறையில் துணை வட்டார வளர்ச்சி அலுவலர் (பொது) இருக்கை இருந்தது. அவ்விருக்கையில் துணை வட்டார வளர்ச்சி அலுவலர் இல்லை. அதற்கு அடுத்த கண்ணாடியால் தடுக்கப்பட்ட அறையில் மேற்கு பார்த்து போடப்பட்ட இருக்கையில் திரு.முத்துசாமி த/பெ சின்னசாமி, கணக்கர் (பொது) பிரிவு என்பவர் அமர்ந்திருந்தார். பின்னர் கணக்கர் அறைக்கு நேர் எதிர்தார்போல் மேற்கு பார்த்த போடப்பட்டிருந்த இருக்கையில் திருமதி.ஜான்சி மெட்டில்தா க/பெ பவுல்ராஜ், இளநிலை உதவியாளர் A-1 அமர்ந்திருந்தார். அவரின் இருக்கைக்கு இடது புறத்தில் மேற்கு பார்த்து போடப்பட்டிருந்த இருக்கையில் திரு.முருகன் த/பெ ராஜங்கம், உதவியாளர், A-2 பிரிவு அமர்ந்திருந்தார். அவரின் இருக்கைக்கு இடதுபக்கத்தில் மேற்கு பார்த்த போடப்பட்டிருந்த இருக்கையில் திருமதி. புஷ்பா, உதவியாளர் த/பெ பாவடை A-3 அமர்ந்திருந்தார். அவருக்கு இடது புறத்தில் மேற்கு பார்த்து போடப்பட்டிருந்த இருக்கை திருமதி.மஞ்சுளா க/பெ ஷிராலு உதவியாளர் A-7 என்பவருடையது என்றும் அவர் இன்று மாவட்ட ஆட்சியர் அலுவலகம் சென்று உள்ளதாக தெரிவித்தனர். அவ்விருக்கைக்கு நேர் எதிரே திரு.கோபாலகிருஷ்ணன், த/பெ ஏழுமலை, இளநிலை உதவியாளர் A-5 அமர்ந்திருந்தார். அவருக்கு இடது புறத்தில் கிழக்கு பார்த்து போடப்பட்டிருந்த இருக்கைகளில் திரு.மணி த/பெ வேலு, கணிணி உதவியாளர் மற்றும் திரு.சூர்யா த/பெ அய்யாசாமி, கணிணி உதவியாளர் ஆகியோரும் அமர்ந்திருந்தனர். பின்னர் பொதுபிரிவு அறையின் தெற்கு புறத்தில் கண்ணாடியால் தடுக்கப்பட்ட இரண்டு அறைகள் வரிசையாக வடக்கு பார்த்து இருந்தது. மேற்படி அறைகளை ஒன்றன்பின்

ஒன்றாக சோதனை செய்தபோது முதலாவது அறையில் திரு.குகன் த/பெ கோவிந்தராஜ், பதிவறை எழுத்தர் என்பவர் அமர்ந்திருந்தார். அந்த அறைக்கு அடுத்தாக உள்ள அறையில் திருமதி நீலாவதி க/பெ அசோக் என்பவரும் அமர்ந்திருந்தார். மேற்படி அறையில் இருந்த நபர்களில் பெண் அலுவலர்களை பெண்காவலர் திருமதி.தேவிகா அவர்கள் உதவியுடனும் மற்ற அலுவலர்களை காவல் குழுவினரை வைத்து, அவர்களையும் அவர்களது இருக்கையையும் சோதனை செய்ததில் திரு.கோபலகிருஷ்ணனிடம் ரூ.330/- திருமதி.புஷ்பாவிடம் ரூ.200/- மற்றும் திரு.மோணிஷ்கண்ணனிடம் ரூ.700/-ம் இருந்தது. அவர்களை தனிதனியாக விசாரணை செய்ததில் அவர்கள் கூறிய காரணம் ஏற்புடையதாக இருந்ததாலும், இன்றைய நாள் தன்பதிவேட்டில் தாங்கள் கொண்டு வந்துள்ள பணத்தை பதிவு செய்து காரணத்தினாலும் அவர்கள் பணம் அவர்கள் வசமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. அதணை தொடர்ந்து பொதுபிரிவுக்கு நேர்எதிரே கிழக்கு பார்த்தவாறு இருந்த கணிணிபிரிவு (MGNREGA) அறையில் நுழைந்தவுடன் வடக்கு பார்த்தவாறு போடப்பட்டிருந்த இருக்கையில் திரு.செந்தமிழ் பிரியன் த/பெ கண்ணன், துணை வட்டார வளர்ச்சி அலுவலர் அமர்ந்திருந்தார். அவ்விருக்கைக்கு இடதுபுறத்தில் வடக்கு பார்த்தவாறு உள்ள இருக்கையில் திரு.ராமசாமி த/பெ பட்டு, உதவியாளர் அமர்ந்திருந்தார். அவருக்கு இடது புறதத்தில் வடக்கு பார்த்த போடப்பட்ட இருக்கையில் ராஜதுரை த/பெ இராமு, கணினி உதவியாளர், (தொகுப்பூதியம்) என்பவர் அமர்ந்திருந்தார். அவருக்கு அடுத்தாக இருந்த இருக்கை காலியாக இருந்தது. அவ்விருக்கை பற்றி கேட்ட போது அது திருமதி.சத்யா என்பரின் இருக்கை என்றும், அவர் உணவு இடைவேலைக்கு பிறகு அனுமதியில் சென்றுவிட்டார் என்று தெரிவித்தனர். அவரது இருக்கைக்கு அடுத்தாக கிழக்கு பார்த்து போடப்பட்டிருந்த இரண்டு இருக்கைகளில் திரு.செல்வராஜ் த/பெ இரத்தினம், கணிணி உதவியாளர் (தற்காலிகம்) மற்றும் திரு.நவீன் த/பெ கோவிந்தன், கணிணி உதவியாளர் (தற்காலிகம்) ஆகியோர் அமர்ந்திருந்தார்கள். அவர்களுக்கு அடுத்தாக தெற்கு புறம்பார்த்து போடப்பட்டிருந்த இருக்கையில் திரு.முருகவேல் த/பெ தனாதையன், கணிணி உதவியாளர் (தற்காலிகம்) என்பவரும், அருக்கு இடதுபுறம் தெற்கு பார்த்து போடப்பட்டிருந்த இருக்கையில் திரு.கருப்பையா த/பெ மாணிக்கம், கணிணி உதவியாளர் (தற்காலிகம்) என்பவரும் அமர்ந்திருந்தார்கள். அவர்களுக்கு அருகில் மேற்குபார்த்தவாறு போடப்பட்டிருந்த இருக்கையில் திருமதி.சுகன்யா க/பெ கருணாகரன் கணிணி உதவியாளர் (தற்காலிகம்) என்பவரும் அவருக்கு இடதுபுறம் மேற்கு பார்த்தவாறு திருமதி.ஜெயந்தி க/பெ சுரேஷ் பாபு உதவியாளரும் அமர்ந்திருந்தார்கள். மேற்படி அறையில் இருந்த நபர்களில் பெண் அலுவலர்களை பெண்காவலர் திருமதி.தேவிகா அவர்கள் உதவியுடனும் மற்ற அலுவலர்களை காவல் குழுவினரை வைத்து, அவர்களையும் அவர்களது இருக்கையையும் சோதனை செய்ததில் திரு.ராமசாமி, இளநிலை உதவியாளரிடம் மட்டும் ரூ 570/- இருந்தது. அவரை விசாரணை செய்ததில் அவர் கூறிய காரணம் ஏற்புடையதாக இருந்ததாலும், இன்றைய நாள் தன்பதிவேட்டில் அவர் கொண்டு வந்துள்ள பணத்தை பதிவு செய்த காரணத்தினாலும் அவர் பணம் அவர் வசமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. அதனை தொடர்ந்து மேற்படி அலுவலகத்தின் முதல் தளத்திற்கு சென்போது அங்கு வடகிழக்கு மூலையில் இருந்த வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ) அறையைபார்த்தபோது, மேற்படி அறையில் தெற்கு பார்த்து போடப்பட்டிருந்த இருக்கையில் திரு.சபரிராஜன், வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ) என்பவர் அமர்ந்திருந்தார். அவரையும், அவரது இருக்கையையும் சோதனை செய்ததில் கைபற்ற கூடிய பணமோ, பொருளோ ஏதும் இல்லை. அதனை தொடந்து மேற்படி அறைக்கு தெற்கு புறம் இருந்த திட்ட பிரிவை சோதணை செய்ய சென்றபோது மேற்படி அறையில் இருந்த திரு.ஸ்டாலின் வெளியே வந்து பின்னர் விசாரித்து தெரிந்துகொண்ட அலுவலக உதவியாளர் திரு.மகேந்திரராஜவிடம் எதையோ மறைத்து கொடுத்தார். மேற்படி மகேந்திரராஜா அதனை அலுவலகத்தின் வாசற்படி அருகே இருந்த

ஜன்னலின் வழியாக வெளியே நின்றுகொண்டிருந்த நபரிடம் தான் கையில் வைத்திருந்ததை கொடுத்தார். மேற்படி பொருளை பெற்ற நபர் அலுவலக வளாகத்தை விட்டு வெளியே செல்ல எத்தனித்தபோது அவரை மடக்கி பிடித்து விசாரணை செய்ததில் அவர் வசம் ரூ.13,000/- இருந்தது. அதை பற்றி கேட்டபோது மேற்படி பணத்தை தற்போதுதான் அலுவலக உதவியாளர் திரு.மகேந்திரராஜா அவர்கள் தன் வசம் கொடுத்து பத்திரபடுத்துமாறு கூறியதாக சொன்னார். அதனை தொடர்ந்து மேற்படி அலுவலக உதவியாளர் திரு.மகேந்திரராஜவை விசாரித்தபோது மேற்படி பணம் திட்ட பிரிவில் ஊர்நல அலுவலராக பணிபுரியும் திரு.ஸ்டாலின் என்பவர் நீங்கள் திடீராய்வு செய்ய வந்ததை தெரிந்து கொண்டு தன் வசம் கொடுத்து வெளியே கொடுத்துவிடுமாறு சொன்னதன் பேரில் அலுவலகத்திற்கு வெளியே இருந்த திரு.பாக்கியராஜ் த/பெ அப்பு, கொசு ஒழிப்பு கள பணியாளர் (தற்காலிகம்) என்பவரிடம் கொடுத்துவிட்டதாக தெரிவித்தார். மேற்படி பாக்கிராஜிடம் இருந்த பெறப்பட்ட பணம் ரூ.13,000/- (500X14, 200X29,100X2) விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. பின்னர் இது தொடர்பாக திரு.ஸ்டாலின், ஊர்நலஅலுவலர் (நிலை-1) என்பவரை விசாரணை செய்துபோது தாங்கள் இத்திடீராய்வு செய்ய வந்த விவரத்தை தெரிந்தவுடன் நான் பொதுமக்களிடமிருந்தது இலஞ்சமாக பெற்று வைத்திருந்த பணத்தை மறைக்கும் பொருட்டு இவ்வலுவலக உதவியாளர் திரு.மகேந்திரராஜா வசம் கொடுத்து மறைத்து வைக்க சொன்னேன் என்று சொன்னார். அதனை தொடர்ந்து, வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ) அறைக்கு அடுத்தாக உள்ள திட்டப்பிரிவு அறைக்கு சென்ற போது இடது புறத்தில் கண்ணாடியால் தடுக்கப்பட்ட மூன்று அறைகள் வரிசையாக கிழக்கு பார்த்து இருந்தது. மேற்படி அறைகளை ஒன்றன்பின் ஒன்றாக சோதனை செய்தபோது முதலாவது அறையில் பதிவறை இருந்தது. அந்த அறையை பார்வையிட்ட போது காலியாகவே இருந்தது. பதிவறைக்கு அடுத்தாக துணை வட்டார வளர்ச்சி அலுவலர் (ஊராட்சி) அறையும் காலியாகவே இருந்தது. பின்னர் அவ்வறைக்கு அடுத்த அறையை பார்வையிட்டபோது, அவ்வறையில் மேற்குபார்த்து போடப்பட்டிருந்த நாற்காலியில் திருமதி.அமுதா, க/பெ ஜெயகுமார், கணக்கர் அமர்ந்திருந்தார். கணக்கர் அறைக்கு நேர் எதிர்தார்போல் மேற்கு பார்த்த போடப்பட்டிருந்த இருக்கையில் திரு.ஸ்டாலின், த/பெ தேவநேசன், ஊர்நல அலுவலர்-I அமர்ந்திருந்தார். அவரின் இருக்கைக்கு இடது புறத்தில் மேற்கு பார்த்து போடப்பட்டிருந்த இருக்கை காலியாக இருந்தது. அந்த காலி இருக்கைக்கு இடதுபக்கத்தில் மேற்கு பார்த்த போடப்பட்டிருந்த இருக்கையில் திரு.ஆரோக்கியராஜ் த/பெ சுவக்கின், ஊர்நல அலுவலர்-I அமர்ந்திருந்தார். அவருக்கு இடது புறத்தில் மேற்கு பார்த்து போடப்பட்டிருந்த இருக்கையில் திரு.ரெங்கநாதன், ஊர்நல அலுவலர்-2 என்பவர் அமர்ந்திருந்தார். அவ்விருக்கைக்கு நேர் எதிரே கிழக்கு பார்த்து திரு.ஜெலடித்ரூவாஸ் த/பெ ஏசுதாஸ் அமர்ந்திருந்தார். அவருக்கு இடது புறத்தில் மேற்கு பார்த்து போடப்பட்டிருந்த இருக்கைகளில் திரு.கிருஷ்ணன் த/பெ பரமசிவவம், கணிணி உதவியாளர் (தற்காலிகம்), திரு.விஜய், த/பெ முருகேசன் கணிணி உதவியாளர் (தற்காலிகம்) மற்றும் திருமதி.சித்ரா த/பெ காசிலிங்கம் ஆகியோரும் அமர்ந்திருந்தனர். அவர்களுக்கு அடுத்தாக கிழக்கு பார்த்தவாறு போடப்பட்டிருந்த இருக்கையில் திரு.அருள்ஜோசப் த/பெ அந்தோனிசாமி கணிணி உதவியாளர் (தற்காலிகம்), என்பவர் அமர்ந்திருந்தார். பின்னர் திட்டப்பிரிவு அறையின் தெற்கு புறத்தில் கண்ணாடியால் தடுக்கப்பட்ட இரண்டு அறைகள் வரிசையாக வடக்கு பார்த்து இருந்தது. மேற்படி இரண்டு அறைகளும் காலியாகவே இருந்தது. மேற்படி அறையில் இருந்த நபர்களில் பெண் அலுவலர்களை பெண்காவலர் திருமதி.தேவிகா அவர்கள் உதவியுடனும் மற்ற அலுவலர்களை காவல் குழுவினரை வைத்து, அவர்களையும் அவர்களது இருக்கையையும் சோதனை செய்ததில் திரு.ஆரோக்கிராஜிடம் ரூ.500/-ம் திரு.ஸ்டாலிடம் ரூ. 430/-, திருமதி.அமுதாவிடம் ரூ.520-ம் இருந்தது. அவர்களை தனிதனியாக விசாரணை செய்ததில்

அவர்கள் கூறிய காரணம் ஏற்புடையதாக இருந்ததாலும், இன்றைய நாள் தன்பதிவேட்டில் தாங்கள் கொண்டு வந்துள்ள பணத்தை பதிவு செய்து காரணத்தினாலும் அவர்கள் பணம் அவர்கள் வசமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. அதனை தொடர்ந்து மேற்படி அலுவலகத்தின் முதல் தளத்தில் செயல்பட்டு வந்த பொறியியல் பிரிவுக்கு சென்றபோது இடது புறத்தில் கண்ணாடியால் தடுக்கப்பட்ட இரண்டு அறைகள் வரிசையாக வடக்கு பார்த்து இருந்தது. மேற்படி அறைகளை ஒன்றன்பின் ஒன்றாக சோதனை செய்தபோது முதலாவதாக ஒன்றிய பணி மேற்பார்வையாளர் சாலை ஆய்வாளர் அறை இருந்தது. அந்த அறையை பார்வையிட்ட போது வடக்கு பார்த்தவாறு இருந்த இருக்கையில் திரு.சிவக்குமார், ஒன்றிய பணி மேற்பார்வையாளர் அமர்ந்திருந்தார். அவருக்கு இடது பக்கத்தில் கிழக்கு பார்த்வாறு இருந்த இரண்டு இருக்கையில் திருமதி.புவனா, க/பெ ஜெகநாதன், ஒன்றிய பணிமேற்பார்வையாளர் மற்றும் திரு.ரங்கநாஜன், ஒன்றிய பணிமேற்பார்வையாளர் ஆகியோரும் அமந்திருந்தார்கள். ஒன்றிய பணிமேற்பார்வையாளர் சாலை ஆய்வாளர் அறைக்கு அடுத்தாக கிழக்கு பார்த்வாறு ஒன்றிய பணிமேற்பார்வையாளர் அறை இருந்தது. அங்கு நுழைந்தவுடன் அறைக்கு மேற்கு புற சுவற்றை ஒட்டி முதலில் உள்ள இருக்கையில் திரு.மகேந்திரன் த/பெ செல்வம் சாலை ஆய்வாளர் அமர்ந்திருந்தார். அவருக்கு வலது புறத்தில் கிழக்கு பார்த்து போடப்பட்டிருந்த இருக்கையில் திரு.சக்திவேல் த/பெ நாகலிங்கம், ஒன்றிய பணிமேற்பார்வையாளர் அமர்ந்திருந்தார். அவருக்கு வலது புறத்தில் இருந்த இருக்கையில் திரு.பிரகாஷ் த/பெ மனோகரன், ஒன்றிய பணிமேற்பார்வையாளர் அமர்ந்திருந்தார். அவருக்கு நேர் எதிரே இருந்த இருக்கை காலியாக இருந்தது. அந்த அறைக்கு வடகிழக்கு மூளையில் இருந்த இருக்கையில் திருமதி.காயத்திரி, த/பெ ஏழமலை சாலை ஆய்வாளர் அமர்ந்திருந்தார். அதனை தொடர்ந்து மேற்படி அறைக்கு இடது புறம் கிழக்கு பார்த்து இருந்த அறைக்கு சென்று பார்த்தபோது அங்கு இரண்டு பொறியாளர்கள் இருக்கை இருந்தது. அவர்களுள் திரு.விஜயன் த/பெ நேரு, உதவி பொறியாளர் மட்டுமே இருக்கையில் இருந்தார். திரு.ஜெயபிரகாஷ் என்பவர் முகாமிற்கு சென்று விட்டார். அவ்வறைக்கு இடது புறம் தெற்கு பார்த்து இருந்த மற்றொரு செயற்பொறியாளர் அறைக்கு சென்றபோது அங்கு திரு.வேல்முருகன் த/பெ சுந்தரமூர்த்தி உதவிசெய்பொரியாளர் இருக்கை இருந்தது. மேற்படி அறையில் இருந்த நபர்களில் பெண் அலுவலர்களை பெண்காவலர் திருமதி.தேவிகா அவர்கள் உதவியுடனும் மற்ற அலுவலர்களை காவல் குழுவினரை வைத்து, அவர்களையும் அவர்களது இருக்கையையும் சோதனை செய்ததில் எவரிமும் கைபற்றகூடிய பணமோ பொருளோ ஏதும் இல்லை. பின்னர் அலுவலகத்தில் இருந்த அரசு அலுவலர்களையும், தினக்கூலி அடிப்படையில் பணிபுரியும் பணியாளர்களை தனிதனியாக விசாரணை செய்ததில் 1. திரு.நடராஜன், வட்டார வளர்ச்சி அலுவலர் (வ.ஊ) அவரை சோதணை செய்ததில் அவரிடம் ரூ.2100/- (500X3, 200X1, 100X4) இருந்தது. அதனை பற்றி கேட்க அவர் முன்னுக்கு பின் முரனாகவும் சரியான முகாந்திரமும் கூறாததாலும், அலுவலகத்தில் பராமரிக்கப்பட்டு வரும் பணம் கையிருப்பு பதிவேட்டில் பதிவுகள் இல்லாததாலும் மேற்படி பணம் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. மேலும் அவரது கைபேசியிலிருந்த கூகுள் பே செயலியில் தரவுகளை பார்வையிட்டதில் மாத சம்பளம் அல்லாமல் கீழ்கண்டுள்ளவாறு

வ.எண்.	மாதம்	தொகை
1.	2026 ஏப்ரல்,	ரூ.1,63,000/-
	மொத்தம்	ரூ.1,63,000/-

பணம் வரவு வைக்கப்பட்டுள்ளது தெரியவருகிறது. அதனை பற்றி கேட்டபோது அவரால் சரியான விளக்கமோ, பதிலோ அளிக்க இயலவில்லை. எனவே மேற்படி தரவுகளின் விவரம் மகஜரில் குறித்து கொள்ளப்பட்டு அவரது கைபேசி அவர்வசமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது.

2. அதனை தொடர்ந்து திரு.விஜயன், உதவிபொறியாளர் கைபேசியிலிருந்த கூகுள் பே செயலியில் தரவுகளை பார்வையிட்டதில் மாத சம்பளம் அல்லாமல் கீழ்கண்டுள்ளவாறு

வ.எண்.	மாதம்	தொகை
1.	2026 ஜீலை	ரூ.1,61,550/-
	மொத்தம்	ரூ.1,61,550/-

பணம் வரவு வைக்கப்பட்டுள்ளது தெரியவருகிறது. அதனை பற்றி கேட்டபோது அவரால் சரியான விளக்கமோ, பதிலோ அளிக்க இயலவில்லை. எனவே மேற்படி தரவுகளின் விவரம் மகஜரில் குறித்து கொள்ளப்பட்டு அவரது கைபேசி அவர்வசமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது.

3. அதனை தொடர்ந்து திரு.ஜெலடித்ரூவாஸ், தற்காலிக பணியாளர், கைபேசியிலிருந்த கூகுள் பே செயலியில் தரவுகளை பார்வையிட்டதில் மாத சம்பளம் அல்லாமல் கீழ்கண்டுள்ளவாறு

வ.எண்.	மாதம்	தொகை
1.	2026 மே	ரூ.3,45,113/-
	மொத்தம்	ரூ.3,45,113/-

பணம் வரவு வைக்கப்பட்டுள்ளது தெரியவருகிறது. அதனை பற்றி கேட்டபோது அவரால் சரியான விளக்கமோ, பதிலோ அளிக்க இயலவில்லை. எனவே மேற்படி தரவுகளின் விவரம் மகஜரில் குறித்து கொள்ளப்பட்டு அவரது கைபேசி அவர்வசமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது.

அதனை தொடர்ந்து ரிஷிவந்தியம் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் பணியில் இருக்கும் 15 தற்காலிக பணியாளர்கள் முறையே 1. திரு.வே.மணிகண்டன், கணிணி உதவியாளர் 2. திரு.சிவசூர்யா, கணிணி உதவியாளர் 3. திரு.ஆரோன், கணிணி உதவியாளர் 4. திரு.ஜான்சி, கணிணி உதவியாளர் 5. திரு.சூர்யா, அலுவலக உதவியாளர் 6. திருமதி.ஜெயந்தி, அலுவலக உதவியாளர் 7. திரு.செல்லமா, அலுவலக உதவியாளர் 8. திரு.அய்யப்பன், அலுவலக உதவியாளர் 9. திருமதி.சாந்தி, அலுவலக உதவியாளர் 10. திரு.அருள் ஜோசப், அலுவலக உதவியாளர், 11. திரு.ஜெனிஸ், கணிணி உதவியாளர் 12. திருமதி.சித்ரா, கணிணி உதவியாளர், 13. திரு.கிருஷ்ணன், கணிணி உதவியாளர் 14. திருமதி.விஜி, கணிணி உதவியாளர் மற்றும் 15. திரு.கலைசெல்வன், கணிணி உதவியாளர் ஆகியோர்களின் பணி ஆணை அல்லது செயல்முறை ஆணை ஏதேனும் இருப்பின் வட்டார வளர்ச்சி அலுவலர்கள் (வ.ஊ) மற்றும் (கி.ஊ) ஆகியோர்களிடம் கோரியபோது அது தொடர்பாக ஆவணங்கள் ஏதும் அவர்கள் வழங்கவில்லை.

பின்னர் அலுவலகத்தில் இருந்த இதரஅறைகளான ஒட்டுனர் அறை, எழுதுபொருள் அறை, மாமன்ற கூட்ட அரங்கு அறை, கணிணி அறை (பொறியியல் பிரிவு), கூட்டரங்கு ஆகியவை சோதனை செய்ததில் கைப்பற்ற கூடிய பணமோ பொருளோ ஏதும் இல்லை. அதனை தொடர்ந்து பணியில் இருந்த திரு.நடராஜன், வட்டார வளர்ச்சி அலுவலர் (வ.ஊ)

அவர்களிடம் அலுவலகத்தில் பராமரிக்கப்படும் வருகை பதிவேடு மற்றும் இதர பதிவேடுகளை பற்றி கேட்டபோது 1. ரிஷிவந்தியம் ஊராட்சி ஒன்றியம் அலுவலக பணியாளர்களின் வருகை பதிவேடு (பொதுப்பிரிவு -2026), 2. ரிஷிவந்தியம் ஊராட்சி ஒன்றியம் அலுவலக பணியாளர்களின் வருகை பதிவேடு (திட்டப்பிரிவு-2026) 3. ரொக்க இருப்பு பதிவேடு (பொதுபிரிவு) ஆகியவற்றை எடுத்து ஆஜர் செய்தார். மேற்சொன்ன பதிவேடுகள் மற்றும் பணம் ரூ.15,100/- இலஞ்ச பணம் மட்டும் கைப்பற்றப்பட்டது. கொடி நாள் வசூல் குறித்து இவ்வலுவலக வட்டார வளர்ச்சி அலுவலரிடம் கேட்டபோது, கொடிநாள் வசூல் ஆன்லைன் மூலம் வசூலிப்பதாவும், தனியாக பதிவேடு ஏதும் பராமரிக்கப்படவில்லை என்றும் தெரிவித்தார்.

பிறகு வட்டார வளர்ச்சி அலுவலர் திரு.நடராஜன், உதவி பொறியாளர், திரு.விஜயன், திரு.ஜெலடித்ரூவாஸ், கணிணி உதவியாளர் (தற்காலிகம்) திரு.பாக்கியராஜ், கொசு ஒழிப்பு கள பணியாளர் (தற்காலிகம்), திரு.ஸ்டாலின், ஊர்நல அலுவலர் (நிலை-1), திரு.மகேந்திரராஜா, அலுவலக உதவியாளர் மற்றும் திரு.சவரிராஜன், வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ) ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது. இந்த திடீராய்வின்போது அலுவலர்கள் கண்ணியத்துடன் நடத்தப்பட்டார்கள். அலுவலக பெண் ஊழியர்கள் கள்ளக்குறிச்சி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு தலைமை காவலர் திருமதி.தேவிகா என்பவர் உதவியுடன் விசாரணை செய்யப்பட்டார்கள். மேலும் அலுவலக உடமைகளுக்கு எவ்வித சேதங்களும் ஏற்படுத்தப்படவில்லை என்பது உறுதி செய்யப்பட்டது. இந்த செயல்முறை நடவடிக்கைகள் மற்றும் வாக்குமூலங்கள் கள்ளக்குறிச்சி மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு மடிக்கணினியில் தட்டச்சு செய்யப்பட்டது. இந்த திடீராய்வு மகசர் இன்று 27.08.2026-ம் தேதி சுமார் 15.00 மணிக்கு ஆரம்பிக்கப்பட்டு சுமார் 23.45 மணிக்கு முடிக்கப்பட்டது.

மேற்படி சம்பவங்கள் அனைத்தும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ள திடீர் ஆய்வு மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேற்படி கைப்பற்றப்பட்ட தொகை ரூ.15,100/- சம்மந்தப்பட்ட அலுவலர்கள் உரிய விளக்கம் அளிக்க இயலாததாலும், அலுவலர்கள் அலுவல் பணியை ஆற்றுகையில் ஏதேனும் குற்றம் இழைத்ததன் விளைவாக அந்த கணக்கில் வராத தொகைகள் முறையற்ற வழியிலும், நேர்மையற்ற முறையிலும், அனுகூலமாகவோ, பிரதி பலனாகவோ அவர்களால் பெறப்பட்டிருக்கக்கூடும் என்று சந்தேகிப்பதற்கு போதுமான முகாந்திரம் இருப்பதாலும், மேலும் ரிஷிவந்தியம் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் தற்காலிக பணியாளர்கள் மூலமாகவும், தனியர்கள் உதவியுடனும் அரசு வேலைகளை அனுகூலமாக முடித்த அல்லது முடித்து கொள்ள பிரதிபலனாக பெற்றிருக்ககூடிய பணமாக இருக்ககூடும் என்று சந்தேகிப்பதற்கு போதுமான முகாந்திரம் இருப்பதினாலும் நான் கொடுக்கும் இந்த புகாரின் அடிப்படையில் ரிஷிவந்தியம் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் பணிபுரியும் சம்மந்தப்பட்ட அலுவலர்களான திரு.நடராஜன், வட்டார வளர்ச்சி அலுவலர் (வ.ஊ), ரிஷிவந்தியம் ஊராட்சி ஒன்றிய அலுவலகம், கள்ளக்குறிச்சி மாவட்டம், திரு.விஜயன், த/பெ நேரு, உதவி பொறியார், ரிஷிவந்தியம் ஊராட்சி ஒன்றிய அலுவலகம், கள்ளக்குறிச்சி மாவட்டம், திரு.ஸ்டாலின், த/பெ தேவநேசன், ஊர்நல அலுவலர் (நிலை-1), ரிஷிவந்தியம் ஊராட்சி ஒன்றிய அலுவலகம், கள்ளக்குறிச்சி மாவட்டம், திரு.ஏ.ஜெலடித் ரூவாஸ், த/பெ ஏசுதாஸ், கணிணி உதவியாளர் (தற்காலிகம்) ரிஷிவந்தியம் ஊராட்சி ஒன்றிய அலுவலகம், கள்ளக்குறிச்சி மாவட்டம், திரு.ரா.மகேந்திர ராஜா, த/பெ ராஜமாணிக்கம், அலுவலக உதவியாளர், ரிஷிவந்தியம் ஊராட்சி ஒன்றிய அலுவலகம், கள்ளக்குறிச்சி மாவட்டம் மற்றும் திரு.பாக்கியராஜ், த/பெ அப்பு, கொசு ஒழிப்பு கள பணியாளர் (தற்காலிகம்), ரிஷிவந்தியம் ஊராட்சி ஒன்றிய அலுவலகம், கள்ளக்குறிச்சி

மாவட்டம் ஆகியோர் மீது உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன்.

Madam,

Received the above computer typed complaint on 28.08.2026 at about 13.00 hrs. After getting oral permission from the DVAC, Chennai, I am Registering a case in Kallakurichi Vigilance and Anti-Corruption, Cr.No.09/2026/KLK, u/s 7, 12 r/w 7 of the Prevention of Corruption Act, 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act 2018 at 14.00 hrs today on 28.08.2026 sd xxxxxx on 28.08.2026 (E.Arunraj) (Inspector of Police, V&AC, Kallakurichi).

The original FIR along with the original computer typed complaint in a sealed cover are sent to the Hon'ble Principal District and Sessions Judge, Kallakurichi and a copy of FIR is submitted to the Director of Vigilance and Anti-Corruption, Chennai.

(E.Arunraj)
Inspector of Police, 28.8.2026
Vigilance and Anti-Corruption,
Kallakurichi.